மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்

ஸ்ரீரங்கம்

**OS.No.1042/2019**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06–ம் நாள் திங்கட்கிழமை DW–2 சாட்சியின் வாக்குமூலம் திரு .S.நவீன்குமார் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.சம்பத் | வயது | 53/2026 |
| த/பெ. | திரு.மகாமுனி | தொழில் | |
| கிராமம் | திருவளர்ச்சோலை | வட்டம் | ஸ்ரீரங்கம் |

முதல் விசாரணை–

நான் இந்த வழக்கில் 3–ம் தரப்பினர் ஆவேன். என்னால் தாக்கல் செய்யப்படும் சத்திய பிரமாண நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

**1.** ஆதார் அடையாள அட்டை நகல் பி.வா.சா.ஆ.12 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.

2. 19.10.2007–ம் தேதியிட்ட பட்டா கணினி நகல் பி .வா.சா.ஆ.13 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் வாதி குத்தகை உரிமையார் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார் . எனக்கு வழக்கு விவரம் தெரியாது என்றால் வயல் வழக்கு . குத்தகை வழக்கு. இந்த வழக்கு குத்தகை வழக்கு இல்லை என்றால் சரியல்ல. வின்சென்ட் எனது ஊர்காரர் நல்லது, கெட்டது விஷயங்களில் கலந்துகொள்வோம். வாதி திருவானைக்கோவிலில் வசித்து வருகிறார் என்றால் அதை பற்றி தெரியாது . எனது சொத்திலோயோ, பக்கம் உள்ள வயலிலோ எனது உடல் உழைப்பை கொண்டு விவசாயம் செய்துவ ருகிறேன் என்று சான்றிதழ் பெறவில்லை என்றால் சரிதான் . 1ம் பிரதிவாதி வின்சென்ட் வழக்கு சொத்தில் சாகுபடி செய்வதுபோன்று நான் பரிந்துரை கடிதம் VAO விடமோ, தாசில்தாரிடமோ கொடுத்ததுபோன்று ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வின்சென்ட்டுக்கு ஆதரவாக நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான் . வின்சென்ட் நடப்பு பசலி வரை சாகுபடி

**செய்ததற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளரா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் வின்செென்ட்டுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**Sd/–xxxxx**

Taken down by me in open court , read over to her and accepted by her as correct and made is his signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam